**2021 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி வியாழன்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :**
**திரு. சு. அருள் செல்வன், B.SC.,**
**ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,**
**விருத்தாசலம் நகராட்சி.**

<u>பொருள் எண். 1.</u>

திருமதி. ரேவதி என்பவர் (மாற்றுத் திறனாளி) இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் பெட்டிக்கடை வைத்துக்கொள்ள அனுமதி அளிக்க சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண். W.P.No. 24256/2013, 06.08.2021ந் தேதியில் வெளிவந்த தீர்ப்புரைக்கு திரு. ஜி. பாலச்சந்திரன், நகராட்சி வழக்குரைஞர் அவர்கள் சட்டக் கருத்துரை வழங்கியதற்காக வழக்குரைஞர் கட்டணம் ரூ. 1100/– அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</u>

(ந.க.எண். 3088/2011/அ2)

<u>பொருள் எண். 2.</u>

விருத்தாசலம் நகராட்சிக்கு எதிராக திரு. சுப்பிரமணியன் என்பவர் சென்னை உயர் நீதி மன்றத்தில் W.P.No. 6572/2021ல் தனது இடத்தில் சுடுகாடு கொட்டகை அமைக்கப்பட்டுள்ளதாக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கை நடத்தி வரும் வழக்கறிஞரான திரு. M. ஏழுமலை, வழக்கறிஞர் அவர்கள் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கை நடத்துவதற்கான கட்டணமான ரூ. 15000/– வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகையை அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 1475/2021/எப்1)

**<u>பொருள் எண். 3.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்கு எதிராக திரு. சுப்பிரமணியன் என்பவர் W.P.No. 810/2021ல் சென்னை உயர் நீதி மன்றத்தில் தனது இடம் நகராட்சியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் கோரி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆஜராகிய சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர் திரு. M. ஏழுமலை என்பவர் வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/– ஐ வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை ரூ. 15000/– ஐ அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 1475/2021/எப்1)

**<u>பொருள் எண். 4.</u>**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் தகுதியுடைய பொது சுகாதார பணியாளர்கள் பொறியியல் பிரிவு பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கான சீருடைகளை தீபாவளி பண்டிகைக்கு முன் வழங்குவதற்கும், அரசு நிர்ணயம் செய்துள்ள தையற்கூலி வழங்குவதற்கான அனுமதியும், சீருடைகள் அரசு சார்புள்ள கடலூர் காதி கிராப்ட் நிறுவனத்தில் வாங்கி வழங்குவதற்கும் தையற்கூலி வழங்கிடவும் உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பொருள் குறித்த செலவினத்தொகையினை 2021–2022 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 5067/2021/எச்1)

**<u>பொருள் எண். 5.</u>**

திரு. ஹரிஹரன், த/பெ. சண்முகானந்தன், 33/29, அச்சுதம்மன் கோயில் தெரு, விருத்தாசலம் என்பவர் விருத்தாசலம் நகராட்சியில் புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்து தரக்கோரி ரூ. 20.00 இலட்சத்திற்கான சொத்து மதிப்பு சான்றிதழ் GST பதிவு சான்று, PAN Card மற்றும் ஆதார் கார்டுடன் விண்ணப்பித்துள்ளார். எனவே அன்னாரை புதிய 5ஆம் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</u>**

**<u>பொருள் எண். 6.</u>**

விருத்தாசலம் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் எண். TN-31-AZ-5697 வாகனத்தின் ஆயுள் காப்பீடு **06.09.2021**வுடன் முடிவதால் மேற்படி வாகனத்தின் ஆயுள் காப்பீட்டினை **07.09.2021** முதல் புதுப்பிக்க THE NEW INDIA ASSURANCE CO.LTD நிறுவனத்திற்கு ரூ. **10232/–** ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 7.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. **4,00,000/–** மதிப்பீட்டில் வார்டு எண் **32** காந்தி நகரில் உள்ள நகர சுகாதார நிலையத்தில் உள்ள கட்டிடத்தில் கூரைதளம் பழுது பார்க்கும் பணி, மின் சாதனம் பழுது பார்க்கும் பணி மற்றும் கட்டிடத்திற்கு வர்ணம் பூசும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண். **4324**, நாள். **30.06.2021**ல் அனுமதியளித்தற்கிணங்க, **27.08.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. வி. ஆர். மணிகண்டன், ஒப்பந்ததாரர் | (-) 0.18 % குறைவு |
| 2. | திரு. வி. பழனிச்சாமி, ஒப்பந்ததாரர் | (+) 1.62 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு. வி.ஆர். மணிகண்டன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள **0.18** % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 1991 /2021/இ1)

**பொருள் எண். 8.**

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 4,50,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 13, அமராவதி நகரில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றுக்கு புதிய நீர்மூழ்கி மோட்டார், புதிய பைப்லைன், சிண்டெக்ஸ் டேங்க், மின் இணைப்பு மற்றும் புதிய பம்ப் ரூப் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண். 4327, நாள். 30.06.2021ல் அனுமதியளித்தற்கிணங்க, 25.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. வி. ஆர். மணிகண்டன், ஒப்பந்ததாரர் | (-) 0.07 % குறைவு |
| 2. | திரு. வி. பழனிச்சாமி, ஒப்பந்ததாரர் | (+) 1.72 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு. வி.ஆர். மணிகண்டன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.07 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 1991 /2021/இ1)

**பொருள் எண். 9.**

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 5,00,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 8, புதுப்பேட்டையில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றுக்கு புதிய நீர்மூழ்கி மோட்டார், புதிய பைப்லைன், சிண்டெக்ஸ் டேங்க் மற்றும் மின் இணைப்பு பெறும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண். 4323, நாள். 30.06.2021ல் அனுமதியளித்தற்கிணங்க, 25.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி. கே. சாந்தி, ஒப்பந்ததாரர் | (-) 0.05 % குறைவு |
| 2. | திரு. கே. சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 1.49 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி. கே. சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.05 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 1991 /2021/இ1)

**பொருள் எண். 10.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 9,95,000/– மதிப்பீட்டில் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின் உதிரி பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண். 4321, நாள். 30.06.2021ல் அனுமதியளித்தற்கிணங்க, 27.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. வி. ஆர். மணிகண்டன், ஒப்பந்ததாரர் | (-) 0.06 % குறைவு |
| 2. | திரு. வி. பழனிச்சாமி, ஒப்பந்ததாரர் | (+) 1.16 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு. வி. ஆர். மணிகண்டன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.06 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 1991 /2021/இ1)

**பொருள் எண். 11.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவு 33 வார்டுகளில் அனைத்து பகுதிகளில் 3வது அலை covid-19 தொற்று நோய் அதி வேகமாக பரவி வருவதால் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தொற்று பரவா வண்ணம் தொடர்ந்து பருவ மழை காலங்களில் தொற்றுநோய் அதிகம் பரவ வாய்ப்புள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி லைசால் 1000 லிட்டர் சப்ளை செய்ய சுகாதார ஆய்வர் மற்றும் சுகாதார அலுவலர் 04.08.2021ல் குறிப்பு கொடுத்துள்ளார். பொது சுகாதாரபணி நலன் கருதியும் அவசரம் அவசியம் கருதியும் சப்ளை செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ. 2,00,000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணி அத்தியாவசியம் மற்றும் அவசரம் அவசியம் கருதி மேற்படி பணி மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 12.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதாரபிரிவு 33 வார்டுகளில் அனைத்து பகுதிகளில் 3வது அலை covid-19 தொற்று நோய் அதி வேகமாக பரவி வருவதால் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தொற்று பரவா வண்ணம் தொடர்ந்து பருவ மழை காலங்களில் தொற்றுநோய் அதிகம் பரவ வாய்ப்புள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி லைசால் 1000 லிட்டர் சப்ளை செய்யும் பணிக்கு 13.08.2021ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Sri Akshya,<br>No. 4/10, woraiyur,<br>Trichy. | லைசால்<br>(லிட்டர் ஒன்றிற்கு)<br>147/– |
| 2. | Blessing Traders,<br>1/B-2 GOD’s Gift complex,<br>Kempstown Trichy, | லைசால்<br>(லிட்டர் ஒன்றிற்கு)<br>160/– |
| 3. | Thirumalai Traders,<br>FF-3, Renga complex,<br>Ramba theatre, Trichy. | லைசால்<br>(லிட்டர் ஒன்றிற்கு)<br>175/– |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் Sri Akshya,No. 4/10, woraiyur,Trichy என்ற நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி அளித்ததை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 13.**

இந்நகராட்சிக்கு சொந்தமான செல்வராசு பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண். 30ஐ திரு. சந்திர.குமார், குத்தகைதாரர் கடை நடத்தி வந்தார். அவர் கடையை தனது குடும்ப சூழ்நிலை காரணமாக நடத்த இயலவில்லை என 13.09.2021ல் தெரிவித்து 30.09.2021 வரை உள்ள கடை வாடகை முழுவதும் 24.09.2021ல் செலுத்திவிட்டார். எனவே 1.10.2021 முதல் குத்தகையை ரத்து செய்து கடையை ஏலம் விடவும் மற்றும் 01.10.2021 முதல் 31.03.2022 வரை உள்ள கடை வாடகை ரூ. 1,08,586/– ஐ கணினியில் நீக்கம் செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** குத்தகை ரத்து செய்து கடையை மறு ஏலம் விடலாம்.

(ந.க.எண். 4705/2021/அ2)

**<u>பொருள் எண். 14.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. **9,95,000/–** மதிப்பீட்டில் வார்டு எண் **6** நகராட்சி பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்படும் கழிவறைக்கு கூடுதல் பணிகளான கூரைதளம், பூச்சு வேலை , கதவுகள்,வெண்டிலேட்டர்,கழிவறை பேசின் ,செராமிக் தரை மற்றும் வர்ணம் பூசும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.**4325**,நாள்.**30.06.2021**ல் அனுமதியளித்தற்கிணங்க **03.09.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஓப்பந்ததாரா் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | M/S. ராசி அண் கோ, ஓப்பந்ததாரா் | மதிப்பீட்டைவிட (-) 0.36 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஓப்பந்ததாரா் | மதிப்பீட்டைவிட (+) 1.34 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.**1** ல் காணும் ராசி அண் கோ ,ஒப்பந்ததாரா் அவர்கள் அளித்துள்ள மதிப்பீட்டை விட **0.36** % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1991 /2021/இ1)**

**<u>பொருள் எண். 15.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. **6,00,000/–** மதிப்பீட்டில் வார்டு எண் **6** ஜங்ஷன் ரோட்டில் உள்ள பழைய ஆடு அறுக்கும் தொட்டி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள வார்டு அலுவலகத்தில் கூடுதல் பணிகளான தரைதளம், தடுப்பு சுவர் ,தண்ணீர் தொட்டி மற்றும் பிளம்பிங் வேலை செய்யும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.**4326**,நாள்.**30.06.2021**ல் அனுமதியளித்தற்கிணங்க **03.09.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஓப்பந்ததாரா் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | M/s. ராசி அண் கோ, ஓப்பந்ததாரா் | மதிப்பீட்டைவிட (-) 0.15 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஓப்பந்ததாரா் | மதிப்பீட்டைவிட (+) 1.46 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.**1** ல் காணும் ராசி அண் கோ ,ஒப்பந்ததாரா் அவர்கள் அளித்துள்ள மதிப்பீட்டைவிட **0.15** % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1991 /2021/இ1)**

**<u>பொருள் எண். 16.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 5,35,000/— மதிப்பீட்டில் வார்டு எண் 15 கடலூர் ரோடு இந்திரா நகருக்கு தினசரி காய்கறி மார்கெட் OHT லிருந்து புதியதாக பைப்லைன் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.4210 ,நாள்.24.02.2021ல் அனுமதியளித்தற்கிணங்க 25.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஜி.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட (-) 0.10 % குறைவு |
| 2. | திரு.டி.ராஜாராம்பட்டு, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட (+) 1.09 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு. ஜி. பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.10 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1991 /2021/இ1)

**பொருள் எண். 17.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு 33 வார்டுகளில் அனைத்து பகுதிகளில் 2வது அலை covid-19 தொற்று நோய் அதி வேகமாக பரவி வருவதால் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தொற்று பரவா வண்ணம் தொடர்ந்து பருவ மழை காலங்களில் தொற்றுநோய் அதிகம் பரவ வாய்புள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பைரித்திரம் 300 லிட்டர் டெமிபாஸ் 200 சப்ளை செய்யும் பணிக்கு . . 2021ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | Sri Akshaya traders<br>No 4/10 woraiyur.<br>Trichy | பைரித்திரம் | (லிட்டர் ஒன்றிற்கு)<br>Rs.997/- |
| | | டெமிபாஸ் | (லிட்டர் ஒன்றிற்கு)<br>Rs.738/- |
| 2 | Thirumalai Traders FF-3<br>Renga complex,<br>Ramba theatre ,Trichy | பைரித்திரம் | (லிட்டர் ஒன்றிற்கு)<br>Rs.1200/- |
| | | டெமிபாஸ் | (லிட்டர் ஒன்றிற்கு)<br>Rs.850/- |
| 3 | Sri Amman Agencies<br>Shop no 3.1/38 .56/1<br>Gokulam colony Trichy. | பைரித்திரம் | (லிட்டர் ஒன்றிற்கு)<br>Rs.1100/- |
| | | டெமிபாஸ் | (லிட்டர் ஒன்றிற்கு)<br>Rs.800/- |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2 வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை 1 ல் காணும் Sri Akshaya traders No 4/10 woraiyur. Trichy விலைப்புள்ளியை ஏற்கலாம்.

3.பணியின் அவசரஅவசியம் கருதி தணி அலுவலர் முன் அனுமதி அளித்ததை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2489/2021/எச்1

**பொருள் எண். 18.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு 33 வார்டுகளில் அனைத்து பகுதிகளில் 2வது அலை covid-19 தொற்று நோய் அதி வேகமாக பரவி வருவதால் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தொற்று பரவா வண்ணம் தொடர்ந்து பருவ மழை காலங்களில் தொற்றுநோய் அதிகம் பரவ வாய்புள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி சுண்ணாம்பு 10 டன் பிளிச்சீங் பவுடர் டன் சப்ளை செய்யும் பணிக்கு . . 2021ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | Sri Akshaya traders , No 4/10 woraiyur. Trichy | சுண்ணாம்பு | (கிலோ ஒன்றிற்கு) Rs.11/- |
| | | பிளிச்சீங் பவுடர் | (கிலோ ஒன்றிற்கு) Rs.54/- |
| 2 | Blessing Treders . 1/B-2 GOD"s Gift complex, Kempstown Trichy ,Trichy | சுண்ணாம்பு | (கிலோ ஒன்றிற்கு) Rs.12.50 |
| | | பிளிச்சீங் பவுடர் | (கிலோ ஒன்றிற்கு) Rs.56/- |
| | Thirumalai Traders FF-3 Renga complex, Ramba theatre ,Trichy | சுண்ணாம்பு | (கிலோ ஒன்றிற்கு) Rs.14/- |
| | | பிளிச்சீங் பவுடர் | (கிலோ ஒன்றிற்கு) Rs.60/- |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2 வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை 1 ல் காணும் Sri Akshaya traders No 4/10 woraiyur. Trichy விலைப்புள்ளியை ஏற்கலாம்.
3.பணியின் அவசரஅவசியம் கருதி தணி அலுவலர் முன் அனுமதி அளித்ததை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3558/2021/எச்1

**<u>பொருள் எண். 19.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN-31-AZ-3057 வாகனத்திற்கு 2021 ஆம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு 05.05.2021 ல் விலைப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்நிலையில் கொரோனா covid-19 தொற்று காரணமாக TV SUNDRAM IYENGAR & SONS (P) LTD,Authorized Dealer, என்பவரிடம் மட்டுமே விலைப்புள்ளி தொகை ரூ 228400/– லட்சத்திற்கு மன்ற அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்ட நிலையில் தற்போது மேற்படி பட்டியல் தொகை செலவினம் ரூ.3,41,340/– இலட்சம் ஆகும்.இவற்றில் கூலி (labour) விடுப்பட்டுள்ளதால் கூடுதல் செலவினம் ரூ 1,12,940/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதாரப் பணி அத்தியாவசியம் மற்றும் அவசர அவசிய கருதி மேற்படி பணி மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.2223/2021/எச்1

**<u>பொருள் எண். 20.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் இயங்கி வந்த குடிநீர் சுத்தகரிப்பு இயந்திரங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பள்ளிகள் மூடப்பட்டிருந்ததால் இயங்காமல் பராமரிப்பின்றி பழுதடைந்துள்ளது. தற்சமயம் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளின்படி பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால் மாணவர்களுக்கு சுத்தமான சுகாதாரமான குடிநீர் வழங்க அனைத்து நகராட்சி பள்ளிகளிலும் உள்ள குடிநீர் சுத்தகரிப்பு இயந்திரங்களை (R.O. System) பழுது நீக்கம் செய்யவும், மேலும் நகராட்சி அலுவலகத்தில் பயன்படாமல் உள்ள குடிநீர் சுத்தகரிப்பு இயந்திரத்தை பழுது நீக்கம் செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரவும் ஏற்படும் தோராய செலவினம் ரூ. 1,70,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 21.**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ள ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளிலிருந்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலமாகவும், நேரிடையாகவும் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி மேற்படி ஆழ்துளை கிணறுகளுக்கு மின் இணைப்புகள் பெற தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்ட மின் இணைப்பு பெட்டிகள் உடைந்த நிலையில் ஆபத்தான வகையில் உள்ளது. இதன் மூலம் எதிர் வரும் வடகிழக்கு பருவ மழை காலங்களில் மின் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பழுதடைந்த மின் இணைப்பு வசதிகளை மாற்றியமைக்கவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 4,25,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.